முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,
முதன்மை சார்பு நீதிபதி.

எ.ம.சா.1 தேதி. 07.08.2025

| MCOP. No. | 265/2019 | | |
|---|---|---|---|
| பெயர் | சந்தியா | த/பெ, | கோவிந்தராஜீலு |
| வயது | 33 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் 3ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது. ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நின்று கொண்டிருந்த பேருந்தின் மீது மனுதாரர் பயணம் செய்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த விபத்தில் 7 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். 7 நபர்களுமே கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் MCOP. Nos. 218/2019, 220/2019, 226/2019, 273/2019, 274/2019 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அனைத்து வழக்குகளிலும் எங்கள் காப்பீட்டு நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்கப்பட வேண்டும் என்று உத்தரவாகியுள்ளது என்றால் சரிதான். அதை எதிர்த்து நாங்கள் மேல்முறையீடு செய்துள்ளோம். மேல்முறையீடு எண் எதுவும் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அது உண்மை இல்லை என்று போலீசார் விசாரணையில் மேற்படி முதல் தகவல் அறிக்கை முடித்து வைக்கப்பட்டது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது எந்தவித தவறும் இல்லாத காரணத்தினாலும், வாகனத்தின் ஓட்டுநர் மீது எந்த வித தவறும் இல்லாத காரணத்தினால் தங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தினால் இந்த விபத்து ஏற்பட்டதனால் எங்கள் நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை**

மனுதாரர் விவேகானந்தன் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தில் தான் பயணம் செய்தார் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக விசாரணையாளரை நியமித்து அவர் தாக்கல் செய்த அறிக்கை எங்களிடம் உள்ளது. இந்த விபத்தினால் மனுதாரருக்கு தலையில் காயம் ஏற்பட்டு தொடர் சிகிச்சையில் இருந்து சிகிச்சை பலன் அளிக்காமல்

இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. விபத்துக்குள்ளான வாகனம் விபத்து சமயத்தில் காப்பீடு மற்றும் ஓட்டுநர் உரிமம் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மனுதாரருக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.